# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

*2128 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

## பதவிகள் - வெற்றிடம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, யூலை மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | யட்டிநுவர கந்துபலாத பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் யட்டிநுவர பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | தும்பனை | உடபலாத்த மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தும்பனை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | ஹாரிஸ்பற்று | மெதசியபற்று இலக்கம் 01 பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹாரிஸ்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை | கங்கவட்ட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கண்டி நகரப் பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

06-201

---

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, யூலை மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குறணை | அக்குறணை ஹாரிஸ்பற்று ரம்புக்கே எல்ல பிரதேசத்தின் முஸ்லிம் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | உடுநுவர யட்டிநுவர பிரிவின் தெஹிஅங்க முருத்தலாவ பிரதேசத்தின் முஸ்லிம் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | தெல்தோட்டை | பாத்தஹேவாஹெட்ட பிரிவின் ஹேவா விஸ்ச பிரதேசத்தின் முஸ்லிம் பதி வாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

06-202

---

## அரசாங்க சேவைகள் ஆணைக் குழு

## பாதுகாப்பு அமைச்சு

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் (திணைக்களம் சார்) பதவிக்கு (சிரேஷ்ட உயர் பதவி பிரிவின் விசேட வகுப்பு)
திறந்த ஆட்சேர்ப்பு

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் (திணைக்களம் சார்) நிலவுகின்ற பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு இவ் அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைப்பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தகுதி மதிப்பு நேர்முகப்பரீட்சை குழுவினால் நடாத்தப்படுகின்ற தகுதி மதிப்பு நேர்முகப்பரீட்சையில் உயர் புள்ளிகளை பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தகுதி மதிப்பு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் செயலுருவாகும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும்.

02. தேவையான தகைமைகள்.-

(i) **கல்வித் தகைமைகள்** .- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டம் மற்றும் பொறியியல் விஞ்ஞானம் /தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்துறைகளில் முதுமாணி/விஞ்ஞானபதி பட்டப்பின் கல்வி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) **அனுபவம்**

(அ) **அரச அதிகாரிகளுக்கு.**- உயர் பதவிப் பிரிவின் வகுப்பு 1 இல் 5 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைக் கொண்ட 18 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்தல் மற்றும் 1 ஆம் வகுப்பிற்கு தரம் உயர்த்தப்பட்டதன் பின்னர் சம்பள உயர்வு ஐந்தினை (05) பெற்றிருத்தல் மற்றும் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுகின்ற தினத்திற்கு அண்மித்த ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) **முப்படை சேவையில் அல்லது ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளுக்கு.**-

(அ) இராணுவத்தில் பிரிகேடியர் அல்லது அப்பதவிக்கு இணையான முப்படைகள் சேவை பதவியின் அதிகாரியாக குறித்த துறையில் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) **அரச தனியார்பிரிவின் விண்ணப்பதாரிகளுக்கு.**- உயர் பதவிப் பிரிவின் பதினெட்டு வருடங்களுக்கு (18) கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தகுதிகள் பரிசீலிக்கும் தினத்திற்கு அண்மித்த 05 வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) **தொழில் தகைமைகள்.**- தொழில் தகைமைகள் பெற்றிருப்பின் அத்தகைமைகள் மேலதிக தகைமைகளாக கருதப்படும்.

(iv) **உடல்நிலைத் தகைமைகள்.**- இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய போதுமான உடல்நிலைத் தகைமைகளைப் பெற்றிருத்தல் மற்றும் உளநிலைத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) **ஏனைய தகைமைகள்.**- அனைத்து விண்ணப்பதாரிகளும் :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(ஆ) சிறந்த நன்நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்;
(இ) விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று சேர்த்துக்கொள்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- மேற்குறிப்பிட்ட தகுதிகளுக்கு அமைய அதிகாரி ஒருவரை இணைத்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் நாடு முழுவதுமான சேவையில் உயர்பதவி வகுப்பில் இருபது வருடங்களுக்கு (20) குறையாத நேரடி சேவைக்காலம் மற்றும் மேற்படி 02.(i) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் தகுதிகள் பரிசோதிக்கும் தினத்திற்கு அண்மித்த ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உயர்பதவி வகுப்பில் 1 ஆம் வகுப்பு அதிகாரியொருவர் இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுவார்.

03. சேவை நிபந்தனைகள்.-

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய கொடுப்பனவுக்கு உட்பட்டது. தற்போது அரசாங்க சேவையில் பணி புரியாத விண்ணப்பதாரிகள் ஓய்வூதிய முறை தொடர்பாக இனி அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு கீழ்படி வேண்டும்.

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சட்ட ஒழுங்கு விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்கு விதிகளுக்கு மற்றும் ஏனைய திணைக்களங்களின் உத்தரவுகளுக்கு இந் நியமனம் உட்பட்டது.

04. **வயது எல்லை.**- விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று 40 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க உத்தியோகத்தர்கள், முப்படை அதிகாரிகளுக்கு ஆகக்கூடிய வயது எல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. முப்படை ஓய்வுபெற்ற அதிகாரிகளின் ஆகக்கூடிய வயதெல்லை 57 ஆகும்.

05. **சம்பள அளவுத்திட்டம்.**-SL 03 -2016. இப்பதவிக்கு ரூபா 88,000-2700 × 12 - ரூ. 120,400 மாதாந்த சம்பள அளவுதிட்டத்தினைக் கொண்டது.

(2016.02.25 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றுநிருபத்தின் இலக்கம் 03/ 2016 இன் ஏற்பாடுகளின் படி உபபிரிவு II குறிப்பிடப்பட்டதற்கு அமைவாகும்)

06. தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளி வழங்கல் ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டது.

| | விடயம் | புள்ளிகள் | உயர்ந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | *மேலதிக கல்வித் தகைமைகள்* | | |
| | கலாநிதி பட்டத்திற்காக (PhD) | 20 | 20 |
| | தத்துவவேதி (MPhil) | 15 | |
| | பட்டப்பின் கல்வி பட்டத்திற்காக (அடிப்படைத் தகைமைகளுக்காக எதிர்பார்க்கப்படும் பட்டப்பின் கல்விப் பட்டத்தினை தவிர) | 10 | |
| 02 | *தொழில் தகைமைகள்* | | |
| | குறித்த துறையில் தேசிய ரீதியில் முன்வைக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கு பெற்றுக்கொண்ட சான்றிதழுக்காக (ஒரு சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம்) | | |
| | குறித்த துறையில் சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கு பெற்றுக்கொண்ட சான்றிதழுக்காக (ஒரு சான்றிதழுக்கு 10 புள்ளிகள் வீதம்) | 20 | 20 |
| | குறித்த துறையில் புதிய கண்டுபிடிப்புகளுக்காக பெற்றுக்கொண்ட பேடன்ட் சான்றிதழுக்காக (ஒரு சான்றிதழுக்கு 20 புள்ளிகள் வீதம்) | | |
| | (ஆகக்கூடியது 20 புள்ளிகள் ஆகும்) | | |
| 03 | *மேலதிக அனுபவம்* | | |
| | (அ) அரசாங்க அதிகாரிகளுக்கும் மற்றும் அரசாங்க தனியார் பிரிவு அதிகாரிகளுக்கு உயர் பதவி பிரிவின் பதினெட்டு (18) வருடங்களுக்கு கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துக்கு (ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 6 வருடங்களுக்கு) | 30 | 30 |
| | (ஆ) முப்படை அதிகாரிகளுக்கு இராணுவத்தில் பிரிகேடியர் அல்லது அப்பதவி நிலைக்கு இணையான முப்படைகள் சேவை அதிகாரியாக குறித்த துறையில் ஐந்து (05) வருடங்களுக்கு கூடிய திருப்திகரமான சேவைக்காலத்திற்கு, (ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 06 வருடங்களுக்கு) | | |
| 04 | *திறன்கள்* | | |
| | குறித்த துறையுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளுக்கு (ஒரு ஆராய்ச்சிக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள்) | 15 | 25 |
| | குறித்த துறையுடன் தொடர்புடைய வெளியீடுகளுக்கு (ஒரு வெளியீட்டுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 10 புள்ளிகள்) | 10 | |
| | (உரிய முறையில் உறுதிப்படுத்தப்படும் ஆவணங்களை முன்வைக்க வேண்டும். அடிப்படைத் தகைமைகள் மற்றும் மேலதிக கல்வித் தகைமைகளை பூர்த்திசெய்வதற்கு அடிப்படையான ஆராய்ச்சிகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.) | | |
| 05 | *நேர்முகப்பரீட்சையின் போது காட்டப்படுகின்ற திறன்கள்* | | |
| | ➢ தலைமைத்துவம் | 02 | 05 |
| | ➢ தொடர்பாடல் | 02 | |
| | ➢ ஆளுமை | 01 | |
| | மொத்தம் | | 100 |

07. **விண்ணப்பதாரியின் அடையாளப்படுத்தல்கள் :** முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவம் அனுப்பிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப்பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப்பரீட்சையின் போது தனது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

08. **விண்ணப்பப் பத்திரங்களை முன்வைத்தல்.**-

(i) விண்ணப்பப் பத்திரம் 2019.07.12 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இலக்கம் 15/ 5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 03 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி இவ்வறிவித்தலில் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் A4 அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி முதல் பக்கத்தில் இல.01 தொடக்கம் 04 வரையிலும் இரண்டாவது பக்கத்தில் இல.05 தொடக்கம் 08 வரையிலும் உள்ளடங்கும் வகையிலும் தனது கையெழுத்தில் விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(iii) கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயக பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்தநொத்தாரிசு/முப்படையில் ஆணையதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது ரூபா 47,615 மாதாந்த சம்பளம் பெறுகின்ற அரசாங்க நிரந்தர சேவை அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல், தாமதமாதல் பற்றி கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

09. **பொய்யான தகவல்கள் வழங்குதல்**.- நீங்கள் அனுப்பப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானது எனச் சேர்த்துக்கொள்வதற்கு முன் தகவல் கிடைக்கப்பெற்றால் அவரின் விண்ணப்பப்படிவம் இரத்து செய்யப்படும். அவ்வாறு சேர்த்துக்கொண்டதன் பின்னர் நீங்கள் வழங்கிய தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானது என தகவல் கிடைக்கப்பெற்றால் அதற்கான நடவடிக்கைகளுக்கு கீழ்பட்டு சேவையில் இருந்து நீக்கப்படுவீர்கள்.

வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாமல் இருத்தல் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் அதிகாரமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தரவின் படி,

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

இலக்கம் -15/5, பாலதக்ச மாவத்தை,
கொழும்பு 03,
2019.06.14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்பு**

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :- Mr./Mrs./Miss :-----.
(ஆங்கில கெபிட்டல் எழுத்தில்)

1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில கெபிட்டல் எழுத்தில்)

1.3 முழுப்பெயர் :-----.
(சிங்களத்தில்)

02. 2.1 நிரந்தர முகவரி :-----.
2.2 தொலைபேசி இலக்கம் :
நிலையான :-----. கையடக்க தொலைபேசி :------.

03. 3.1 இனம் ☐ சிங்களவர்-1, தமிழர் - 2, முஸ்லிம் -3, ஏனையவர் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.2 பால் : ஆண்/பெண் : ☐ பெண் - 1, ஆண் - 2 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.3 திருமணமானவரா/திருமணமாகாதவரா : ☐ திருமணமானவர்-1, திருமணமாகாதவர்-2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.5 பிறந்த திகதி : ஆண்டு ....... மாதம் ................ திகதி ............

3.6 2019.07.12 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் ....... மாதங்கள் ................ நாட்கள் ............

04. 4.1 கல்வித் தகைமைகள் :

4.1.1 சாதாரண பட்டம்
(i) பட்டம் :-----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.
(iii) பட்டம் அமுலாகும் திகதி :-----.

4.1.2 கலைமுதுமானி விஞ்ஞான முதுமானி பட்டம்
(i) பட்டம் :-----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.
(iii) பட்டம் அமுலாகும் திகதி :-----.

4.2 அனுபவம்

4.2.1 அரசாங்க அதிகாரிகளுக்கு :-----.
(i) முதல் நியமனத் திகதி :-----.
(ii) முழுமையான சேவைக்காலம்
(iii) உயர் பதவி பிரிவில் 1 ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி மற்றும் சேவைக்காலம் :-----.

4.2.2 முப்படையில் சேவை புரிகின்ற அல்லது ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளுக்கு
(i) அப்பதவி நிலைக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
(ii) அப்பதவி நிலையில் சேவைக்காலம் :-----.
(iii) ஓய்வுபெற்ற திகதி (ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு) :-----.

4.2.3 அரசாங்க தனியார் பிரிவு அதிகாரிகளுக்கு
(i) முதல் நியமனத் திகதி :-----.
(ii) முழுமையான சேவைக்காலம் :-----.
(iii) உயர் பதவி சேவைக்காலம் :-----.

05. நீர் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டிருப்பின் அதன் திகதி மற்றும் வழக்கு இலக்கத்துடன் முழுமையான விபரங்களை வழங்கவும்.

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன் நிரூபிக்கப்பட்டால் அதன் காரணமாக நான் இப்பதவிக்கு தகுதி அற்றவராகவும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின் அக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித இழப்பீட்டுத் தொகையும் செலுத்தாமல் சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

திகதி :-----. ------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

07. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் ஆணையதிகாரம் பெற்ற அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியுடைய அதிகாரி அல்லது ரூபா 571,380 இற்கு அதிகமான வருடாந்த அடிப்படை ஊதியம் பெறுகின்ற அரசாங்க நிரந்தர பதவி வகிக்கின்ற அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுகின்ற (முழுப்பெயர்) திரு./திருமதி/செல்வி ......................................... . என்பவர் தனிப்பட்ட வகையில் தெரிந்தவர் என்றும் ......................................... ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
(கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அதிகாரியின் கையொப்பம்)

கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அதிகாரியின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
விலாசம் :-----.
திகதி :-----.

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

8. விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராக அல்லது அரசாங்க தனியார் சேவையாளராக இருப்பின் திணைக்களத் தலைவரின் அறிக்கை இவ் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுகின்ற........................................................ (முழுப்பெயர்) தனிப்பட்ட வகையில் தெரிந்தவர் என்றும் ........................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

அவரின் வேலை, வருகை மற்றும் நடத்தை .................. என்று உறுதிப்படுத்துகின்றேன். தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

-----,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்)

திகதி :-----.
பெயர் :-----.
பதவி :-----.
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

6-678

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**பொதுச் சேவை ஆணைக்குழு**

**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தில் நிறைவேற்றுத்தர சேவை வகுப்பைச் சார்ந்த தீர்வை வரி பகுப்பாய்வாளர் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019**

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தில் III தரத்தில் நிலவும் 02 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளை உடைய அலுவலர்களிடமிருந்து பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பங்களைத் தயாரித்து கீழே குறிப்பிட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், செயலகம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் “வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தில் நிறைவேற்றுத் தர சேவை வகைப்பாட்டைச் சார்ந்த தீர்வை வரிப் பகுப்பாய்வாளர் III தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019” எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2019.07.15 ஆகும்.

**குறிப்பு** : தபாலில் விண்ணப்பம் அல்லது அது தொடர்பான ஆவணம் ஒன்று தொலைந்து போதல் அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை** :

எழுத்துப் பரீட்சையினதும் தகைமை மதிப்பீட்டு பரீட்சையினதும் மொத்தப் புள்ளிகளின்படி திறமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் புள்ளிகளின் திறமை வரிசை பிரகாரம் ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யும் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கினர் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். அப்பரீட்சையில் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளை எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளுடன் கூட்டிப் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசை பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப்பெறும் திகதி பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் தீர்மானிக்கப்படும். எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்கள், அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் ஒன்றில் 2 பிரதிகள் சகிதம் இலங்கை மன்றக் கல்லூரி மூலம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும்.

2. **சம்பள அளவுத்திட்டம்** :

இப்பதவி 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கை பிரகாரம் SL-1-2016 ரூபா 47,615-10 × 1335 - 8 × 1630 - 17 × 2170 - ரூபா 110,895 (மாத) சம்பள

அளவுத்திட்டத்திற்கு உரித்துடையது. இது தங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதும் ஆகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்தல் வேண்டும்.

(ii) இப்பதவிக்காக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒருவருட காலத்திற்கு பதிற்கடமை அடிப்படையில் சேவையாற்றுதல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/ 2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் அதன் இடைநேர் சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியை ஐந்து (5) வருடத்திற்குள் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கும், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர வகுப்பிற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளின் நிபந்தனைகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும், இந்நியமனம் உட்பட்டதாகும்.

4. **தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல் அல்லது முகாமைத்துவத்தில் விசேட பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல் அல்லது முகாமைத்துவம் ஆகிய பாடங்களுடன் சாதாரண பட்டம் மற்றும் பொருளியல் அல்லது முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

4.2 **அனுபவம் :**

அரசாங்க சேவையில் MN-01 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத் தொகுதியின் கீழ் சம்பளம் பெறும் பதவி ஒன்றில் 10 வருட தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தராக இருத்தல்.

(தீர்வை வரி மற்றும் ஏனைய இறக்குமதி வரிகளும் அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் பற்றிய சேவை அனுபவத்திற்காகவும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும்.)

4.3 **உடல் ரீதியான தகைமைகள் :**

(i) அனைத்து அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்றவும்;
(ii) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான 4.1 முதல் 4.2 வரையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) தகைமைகளைப் பரீட்சிக்கும் திகதிக்கு அண்மித்த ஐந்து (05) வருட காலத்திற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

(v) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

5. **எழுத்துப் பரீட்சை :**

5.1 இப்பரீட்சை இலங்கை மன்றக் கல்லூரியினால் நடாத்தப்படும்.

| வினாப்பத்திரம் | காலம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளிகள் | சித்தியடை வதற் கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. தீர்வை வரி பகுப்பாய்வு | 2 | 100 | 40 |
| 2. சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் | 2 | 100 | 40 |

5.2 பாடப்பரப்பு

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடப் பரப்பு |
|---|---|
| 1. வரிப் பகுப்பாய்வு | 1.1 நடைமுறையிலுள்ள தீர்வை வரிக்கட்டமைப்பின் தோற்றம், அதன் அமைப்பு மற்றும் அரச வருமானத்திற்கான பங்களிப்பு<br>1.2 தீர்வை வரி அமுலாக்கல் பொறிமுறை மற்றும் அது தொடர்பான சட்டவரைமுறைகள்<br>1.3 தீர்வை வரி அறவிடல் மற்றும் வரி விலக்கு<br>1.4 தீர்வை வரி விலக்களிப்பிற்கான பல்வேறு முன்யோசனைத் திட்டங்கள்<br>1.5 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் தீர்வை வரிக்கு இணையாக நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய வரி வகைகள் பற்றிய பகுப்பாய்வு |
| 2. சர்வதேச வர்த்தக உடன்படிக்கை கள் | 2.1 இலங்கையின் சர்வதேச வர்த்தகம் தொடர்பாக உலக வர்த்தக அமைப்புக்களுடன் உள்ள தொடர்புகளும் செயற்பாடுகளும்<br>2.2 இலங்கையின் இருதரப்பு உடன்படிக்கைகளும் அவற்றில் தீர்வை வரி சீரமைப்பு உட்பட ஏனைய உள்ளடக்கங்களும்<br>2.3 இலங்கையின் பல்தரப்பு உடன்படிக்கைகளும் அவற்றில் தீர்வை வரி சீரமைப்பு உட்பட ஏனைய உள்ளடக்கங்களும்<br>2.4 எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வர்த்தக உடன்படிக்கை களும் அவற்றுக்கான தேவையும்<br>2.5 சர்வதேச உடன்படிக்கைகள் ஊடாக இலங்கையின் பொருளா தாரத்தில் ஏற்படும் தாக்கங்களும், நன்மை தீமை பற்றிய ஆய்வும். |

6. **நேர்முகப் பரீட்சை :**

6.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகத் தேர்வு :
பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபை ஒன்றின் ஊடாக புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பரீட்சிக்கப்பட்டு புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | வரிக்கொள்கைகளை அமுல்படுத்துவது தொடர்பான சேவை அனுபவம் | 15 | ஏற்புடைய தன்று |
| 2 | மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | |
| 3 | பெற்றுள்ள துறை சார் பயிற்சிகளும் ஏனைய தகைமைகளும் | 05 | |
| 4 | மொழித்தேர்ச்சி | 05 | |
| 5 | கணினி ஆற்றல் | 05 | |
| 6 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப்படும் திறமை | 05 | |

7. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். அபேட்சகர்கள் விரும்புகின்ற மொழியில் பரீட்சைக்கு தோற்ற முடியும். அபேட்சகர்கள் இப்பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் தோற்ற வேண்டும். அபேட்சகர்களுக்கு தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட பரீட்சை மொழியை மாற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. அனைத்து விண்ணப்பதாரிகளும் வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். பரீட்சைக் கட்டணம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்திற்காக மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் பேணப்படும் 014100169026611 ஆம் இலக்க கணக்கிற்கு வைப்புச் செய்து விண்ணப்பதாரியின் பெயருக்கு பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் ஓரம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டி விடவும். இப்பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் விண்ணப்பத்தைப் பதிவுத் தபாலில் இடும் போது பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும்.

(iii) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

(v) சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

(vi) பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அறிவிக்கப்பட அல்லது நிதி அமைச்சின் www.treasury.gov.lk எனும் வலைத்தளத்தில் வெளியிடப்பட முடியும்.

**குறிப்பு** : பரீட்சை அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டாது, பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மண்டபத் தலைவருக்கு தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையை மாத்திரமே சமர்ப்பித்தல் வேண்டும்.

அபேட்சகருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளார் என்பதை உறுதி செய்வதாகாது.

(vii) விண்ணப்பப்படிவம் A4 அளவு தாளில் தயாரிக்கப்படவேண்டியதுடன், 1 முதல் 4 வரையான தலைப்புக்கள் முதல் பக்கத்திலும், எஞ்சியவை ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்கப்படவேண்டும். உரியதகவல்களை தமது கையெழுத்துக்களாலேயே தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரி கவனம் செலுத்த வேண்டியதுடன், அவ்வாறு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

(ix) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் உட்படல் வேண்டும். அவ் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டால் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(x) அபேட்சகரின் ஆளடையாளம் : பரீட்சை மண்டபத் தலைவர் திருப்தியுறும் வகையில் அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனிக்க** : (அ) விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணமோ அல்லது அதன் பிரதியோ இணைக்கப்பட லாகாது.

(ஆ) கோரப்படும் பட்சத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறினால் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது ஒப்பத்தை தாம் சேவையாற்றும் திணைக்களத் தலைவர் மூலமாக சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இதில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் ஏதாயினும் கருத்து மாற்றங்கள் காணப்படுமாயின், அச் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலையே பின்பற்றல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்.

செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
செயலகம்,
கொழும்பு - 01,
2019, மே 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகுப்பைச் சார்ந்த தீர்வை வரிப் பகுப்பாய்வாளர் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019**

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம்<br>(அலுவலக உபயோகத்திற்காக) | |
| பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :<br><br>சிங்களம் - 1, தமிழ் - 2, ஆங்கிலம் - 3<br>(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக)<br>பரீட்சை ஊடக மொழியை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. | ☐ |

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA)

1.2 இறுதிப் பெயரை ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : KUMARA, H. M. S.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2.4 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.5 அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

(அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை அனுப்புதல் வேண்டும். முகவரியில் மாற்றம் ஏதும் ஏற்படின் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

03. 3.1 பால் : பெண் - 1 ஆண் - 0 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக) ☐

3.2 விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது : விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.3 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2019.07.15 ஆந் திகதியில் வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தொலைபேசி இலக்கம் : அலுவலக :-----. பிரத்தியேக :-----.

04. 4.1 அறிவித்தலில் 4.1 பிரிவின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பெற்றுள்ள தகைமைகள் :-----.

4.2 தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் :-----.

4.3 சேவைக்காலம் பற்றிய விபரம் :-----.
(அ)

| சேவையாற்றியுள்ள திணைக்களம் | பதவி | முதல் | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ) சேவை/ பதவி :
வகுப்பு :----- ஆந் திகதி முதல்
தரம் :----- ஆந் திகதி முதல்
2019.06.14 ஆந் திகதியில் வருடாந்த சம்பளம் :-----.

05. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும்.

செலுத்திய தொகை :-----. ரூபா
பணம் செலுத்திய இடம் :-----.
பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
பணம் செலுத்திய திகதி :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை வைத்திருக்கவும்.) |

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

6.1 இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய .................. இலக்கமுடைய ........... ஆந் திகதியைக் கொண்ட பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது எனவும், நான் தகைமையற்றவர் எனக் காணுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்து செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவதாகவும் மேலும் பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளரால் விதிக்கப்படும் சட்டவிதிமுறைகளுக்கு நான் உட்படுவதாகவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

6.2 2019.06.14 ஆந் திகதிக்கு உடனடுத்த ஐந்து வருட காலத்துள் (சேவை சார்ந்த அல்லது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைவது நிபந்தனையாகவுள்ள சம்பள ஏற்றம் தவிர்ந்த) அனைத்து சம்பள ஏற்றங்களும் என்னால் ஈட்டப்பட்டுள்ளதாகவும், (எச்சரிக்கை தவிர்ந்த) எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் நான் உட்படவில்லை என்பதையும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

07. திணைக்களத் தலைவரின் சான்றுரை : தமது தனிப்பட்ட கோவை பராமரிக்கப்படும் அலுவலக தலைவர் திணைக்களத் தலைவர் என்ற வகையில் ஒப்பமிடல் வேண்டும்.

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ............ எனப்படும் விண்ணப்பதாரி ................. திகதி முதல் இவ் அலுவலகத்தில் சேவையாற்றுவதாகவும், அவரது பணியும் நடத்தையும் எப்பொழுதும் திருப்திகரமானது எனவும், மேலே 04 இல் வழங்கப்பட்டுள்ளவற்றை இவ் அலுவலகத்திலுள்ள அறிக்கைகள் ஊடாக நான் பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதையும் 2019 ..................... மாதம் ............. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் ஒப்பமிட்டதையும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திகதி :----. திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(இறப்பர் முத்திரையால் சான்றுப்படுத்துக.)

குறிப்பு.- விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் சான்றுப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். ஏதாயினும் நிறுவனம் ஒன்றின் ஊடாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் தனது கை ஒப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

06-377

---

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III மற்றும் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 (2018)**

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III மற்றும் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற திணைக்கள உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப்பரீட்சையின் மூலம் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III மற்றும் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது மேற்கொள்ளப்படுகின்றது.

**எழுத்துப் பரீட்சை.-**

(i) உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III இற்கானது. இப்பரீட்சையில் பின்வரும் வினாத்தாள்கள் இரண்டிலும் (02) சித்தியடைய வேண்டும்.

(1) நுண்ணறிவுப் பரீட்சை
(2) தொழில்நுட்ப மற்றும் அலுவலக முறைமைகள்

(ii) உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக்காப்பு) தரம் III இற்கானது. இப்பரீட்சையில் பின்வரும் வினாத்தாள்கள் இரண்டிலும் (02) சித்தியடைய வேண்டும்.

(1) நுண்ணறிவுப் பரீட்சை
(2) ஆற்றல் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்

**பரீட்சை திகதி** : இப்பரீட்சை 2019, செத்தெம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சையினை தாமதப்படுத்தல் மற்றும் இடை நிறுத்துதல் ஆகியவற்றிற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு உரிமையுண்டு.

02. உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III இற்காக இணைத்துக்கொள்ளப்படவுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 04 ஆகும். உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III இற்காக இணைத்துக்கொள்ளப்படவுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 01 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

**03. சேவை நிபந்தனைகள்.-**

3.1 பொதுச் சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் 2017.05.16 ஆந் திகதி PSC/ EST/ 04-01-43/05/ 2014 ஆம் இலக்க அனுமதியின் கீழ் இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் சேவை பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதன் அடுத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள்

தாபன விதிக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் இச்சேவையில் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

3.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3.3 நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட சேவைகளில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III மற்றும் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தப்படல் வேண்டும்.

3.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றிற்கு இணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்து உரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச்செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 03/ 2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895 (எஸ். எல்.1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

5.0. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி**.-

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான உடல்/ உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(ஆ) ***அனுபவம்***.-

(i) மாவட்டப் பரிசோதகர் சேவையில் அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) கடைசி 05 வருடங்கள் திருப்திகரமான சேவையுடன் இலங்கை தொழில்நுட்ப சேவையின் விடேச தரத்தில் புகையிரத என்ஜின் சாரதியாக இருத்தல்.

***வேறு***.-

(i) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான மேற்கூறப்பட்ட அனைத்து தகுதிகளும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) வயதெல்லை பொருத்தமற்றது.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை திணைக்கள ஆணையாளரின் வரவு இல. 2003-02-13 அடிப்படையில் அரசாங்க வருமானத்திற்கு வரவாகுமாறு நாடெங்கும் உள்ள எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்திற்கு பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிடவும். பரீட்சைக் கட்டணமாக ரசீது அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கு செலுத்தப்படும் பணம் எச்சந்தர்ப்பத்திலும் திருப்பித்தரப்படமாட்டாது. மேலும், வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று.

07. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அது ஏ4 (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாவிக்க முடியும் 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறு பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் கணினி அல்லது தட்டச்சின் மூலம் தயாரிக்கப்பட்டவையாகவும் இருக்கலாம் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தெளிவாக நிரப்பப்படல் வேண்டுவதோடு மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உட்செலுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதனையும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் 2019.07.12 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III - பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 (2018)" மற்றும் "இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III - பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 (2018)" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு,
மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. - 1503,
கொழும்பு"

(ஈ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(உ) ஏதாவது ஒரு வகையில் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை மூலமாக வெளியிடப்படும். பத்திரிகை மூலமாக வெளியிடப்பட்டு அத்தினத் திலிருந்து ஓரிரு நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கும் போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பை தவிர்ந்த விண்ணப்பதாரியாயின் தகவல்களையும் அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியாயின் பெக்ஸ் இலக்கத்தையும் குறித்து விண்ணப்பக் கடிதத்தை பெக்ஸ் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாகும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை எனக்கொள்ள உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை தயார்நிலையில் வைத்திருப்பது சிறந்தது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.-

(அ) வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ளவாறு தகுதியுடையவர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார் என்பதை கொண்டும் விளம்பரத்தில் கூறியவாறு வயதெல்லையினை உடைய, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று மற்றும் அத்தினத்திற்கு முன் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூரணப்படுத்தி அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப் பத்திரம், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முன்கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரங்களைப் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ் வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்திலும் அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரி ஏதேனும் ஒரு திணைக்களத்தில் சேவையாற்றுபவராயின் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஆளடையாள ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை பெற்றுத்தர வேண்டும். இப்பரீட்சையின் விதி முறைக்கமைய யாதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தகுதியற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறுவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப்படல் வேண்டும்.

12. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்**.-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தான் சேவைக்குச் சேர்வதற்காகத் தகைமை பெற்ற பட்டப் படிப்பினைப் பூர்த்தி செய்த மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

குறிப்பு :

(1) விண்ணப்பதாரி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரி அனுமதிக்கப் படமாட்டார்கள்.

13. ஆட்சேர்ப்பு முறை :

13.1 **எழுத்துமூலப் பரீட்சை.-**

(i) உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III இற்கான பரீட்சையானது பின்வரும் வினாத்தாள்கள் இரண்டிலும் (02) சித்தியடைய வேண்டும். உள்ளடக்கியிருக்கும் பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்த பட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :

| பாடம் | காலம் | அதிகூடிய புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலயம் | 100 | 50 |
| 02. தொழில்நுட்பம் மற்றும் அலுவலக முறைமைகள் | 03 மணித்தியாலயம் | 100 | 50 |

(ii) உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III இற்கான பரீட்சையானது பின்வரும் வினாத்தாள்கள் இரண்டிலும் (02) சித்தியடைய வேண்டும்.

| பாடம் | காலம் | அதிகூடிய புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலயம் | 100 | 50 |
| 02. வலுக்காப்பு மற்றும் நிர்வாகம் | 03 மணித்தியாலயம் | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

13.2 **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.-**

உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) III மற்றும் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III பதவிக்காக விண்ணப்பிக்கும் எழுத்துப் பரீட்சையில் பங்கு பற்றி இரண்டு பாடத்திற்கும் 50% இற்கு கூடிய புள்ளிகளை கொண்டு சித்திபெறும் அனைத்து விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சையில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் மற்றும் சிரேஷ்ட தகைமைகளை பார்ப்பதற்கும் கீழ்வரும் அட்டவணையின் அடிப்படையில் நியாயமான முறையில் நேர்முகப் பரீட்சை இடம்பெறப்படும். அதில் பெறப்படும் அதிகூடிய புள்ளிகள் 100 ஆகும்.

| விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|
| 1. தொழில் அனுபவம்<br>பணி மூப்பு - 50<br>உயர் புகையிரத பயணம் தொடர்பாக அனுபவம் பெற்றவராக இருப்பின் - 10 | 60 |
| 2. திறமைகள் | 40 |
| கூட்டுத்தொகை | 100 |

இதில் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் விதிமுறையானது கீழ்வருமாறு காணப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் முறை | பார்க்கப்படும் விடயங்கள் | கொடுக்கப்படும் புள்ளிகள் | அதிக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| பணி மூப்பு தொடர்பான | ஆட்சேர்ப்புக்கான முதல் தகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது 05 வருட பூரண சேவை காலம் தவிர்த்து இலங்கை புகையிரத தொழில்நுட்ப சேவையில் மாவட்ட பரிசோதகர் (இயந்திரம்) பதவியில் அல்லது விஷேட தரத்தில் புகையிரத என்ஜின் சாரதி பதவியில் உத்தியோகத்தராக முனைப்பானதும் திருப்திகரமான சேவை காலத்தினை கொண்டிருப்பின் (கூடியது 10 வருட காலத்திற்கு) | ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதமாக | 50 |
| | | ஒரு வருடத்திற்கு குறைவு 06 மாதத்திற்கு கூட 03 புள்ளிகள் வீதமாக | |
| | | 06 மாதத்திற்கு குறைவு 03 மாதத்திற்கு கூட 02 புள்ளி வீதமாக | |
| | உயர் புகையிரத பயணம் தொடர்பாக அனுபவம் பெற்றவராக இருப்பின் (கூடியது 05 வருட காலத்திற்கு) | ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதமாக | 10 |
| | | ஒரு வருடத்திற்கு குறைவு 06 மாதத்திற்கு கூட 01 புள்ளிகள் வீதமாக | |
| | | 06 மாதத்திற்கு குறைவு 03 மாதத்திற்கு கூட 1/2 புள்ளி வீதமாக | |
| திறமை | 1. டீசல் ஹைட்ரோனிக் என்ஜினை ஓட்டக்கூடியவராக இருத்தல் (W1, W2, W3, Y வகுப்பிற்குரிய என்ஜின்) | 06 புள்ளிகள் | 40 |
| | 2. டீசல் ஹைட்ரோனிக் சக்தி என் ஜினை ஓட்டக்கூடியவராக இருத்தல். (S 8 சக்தி ஆற்றல்) | 06 புள்ளிகள் | |
| | 3. டீசல் மின் சக்தி என்ஜினை ஓட்டக் கூடியவராக இருத்தல். (S9, S10, S11, S12 சக்தி ஆற்றல்) | 06 புள்ளிகள் | |
| | 4. டீசல் மின் சக்தி என்ஜினை (இரண்டு பக்கம்) ஓட்டக் கூடியவராக இருத்தல். (M2, M6, M7 வகுப்பிற்குரிய என்ஜின்) | 06 புள்ளிகள் | |
| | 5. டீசல் மின் சக்தி என்ஜினை (நான்கு பக்கம்) ஓட்டக் கூடியவராக இருத்தல். (M4, M5, M8, M9, M10 வகுப்பிற்குரிய என்ஜின்) | 06 புள்ளிகள் | |
| | (என்ஜின் ஓடக்கூடிய திறமை மற்றும் அனைத்து புகையிரத பாதை களிலும் சேவை புரிவதற்கான அவதானிக்கப் படுவதுடன் வாய்மொழி மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்) | 04 புள்ளிகள் | |
| | 6. என்ஜின் சாரதி பொறுப்பாளராக கடமையாற்றியுள்ளமை<br>(பொது 230 b படிவத்தை நிரப்பவும்)<br>தலைவரிடம் பெற்றுக்கொண்ட பாராட்டுதலுக்கு 01 புள்ளிகள் வீதம் கூடிய 04) | 03 புள்ளிகள் | |
| | 7. புகையிரத என்ஜின் ஓட்டுவதற்கு தொடர்பாக பெற்றுக்கொண்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயிற்சிகள் தொடர்பான சான் றிதழ்கள்<br>1. இரண்டு வாரத்திற்கு குறையாத பயிற்சி நெறிக்காக 01 புள்ளிகள்<br>(அதிகூடிய புள்ளிகள் பெற்றுத்தரப்படும் ஒரு பாடநெறிக்காக மட்டுமே) | 03 புள்ளிகள் | |
| | 8. நேர்முகப்பரீட்சைக்கு வெளிப் படுத்தப்படும் திறமைகள் :<br>(a) தலைமைத்துவம் - 1 புள்ளி<br>(b) தொடர்பாடல் திறமை - 1 புள்ளி<br>(c) ஆளுமை - 1 புள்ளி | | |
| மொத்தம் | | | 100 |

**கவனிக்கவும்.-** நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தலானது நியமனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற சகல தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படலாகாது.

13.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.result.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

14. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்.-**

(i) உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III இற்கான

01. **நுண்ணறிவுப் பரீட்சை.-** விண்ணப்பதாரி எண்கள், மொழிசார் இடைத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிவுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு பல்தேர்வு வினாக்களை கொண்ட வினாத்தாளாகும்.

02. **தொழில்நுட்பம் மற்றும் அலுவலக முறைமைகள் :**
இப்பரீட்சார்த்தி,
(i) என்ஜின்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவு.
(ii) தொழில்நுட்ப பயிற்சி தொடர்பான பயிற்சி பட்டறைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான அறிவு.

(iii) என்ஜின் உத்தியோகத்தர்களால் இடம் பெறக்கூடிய தவறான நடவடிக்கை இணங்கண்டு விசாரணை செய்து அவற்றினை தடுக்கக் கூடிய அறிவு.

(iv) புகையிரத விதிக்கோவை, திணைக்கள சுற்றறிக்கைகள் நிர்வாக முறைமைகள் தொடர்பான அறிவு.

(v) என்ஜின் உத்தியோகத்தர்களை சுழற்சி முறையில் சேவைக்குட்படுத்தக்கூடிய கோட்பாட்டினை வகுக்கக்கூடிய அறிவு.

(vi) இயந்திரத்திற்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக பரிசீலனை செய்து, அது தொடர்பான அறிக்கையை முன் வைக்கக்கூடிய அறிவு.

(vii) என்ஜின் உத்தியோகத்தர்களை சரியான முறையில் திட்டமிடல் தொடர்பான அறிவு.

(viii) என்ஜின் உத்தியோகத்தர்களுக்கு இடையிலான தொடர்பாடல்களை சிறந்த முறையில் மேற்கொள்ளல்.

(ix) புகையிரதத்தில் பயணம் செய்து புகையிரத பயணத்திற்கு ஏற்ற முறையினை பரிசீலனை செய்து அவசியமான மாற்றங்களை மற்றும் ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் அத்துடன் மேலும் முன்னேற்றத்திற்கு மற்றும் திட்டங்களை முன்வைப்பதற்கு கூடிய திறமை.

(x) புகையிரத சமிக்ஞை மற்றும் பாதைகள் தொடர்பாக பரிசீலனை செய்து, அது தொடர்பான அறிக்கையை முன்வைக்கக்கூடிய அறிவு

போன்றன உள்ளடக்கப்பட்ட கட்டுரை வரைதல் மற்றும் பந்தியினை வாசித்து அதன் மூலம் வினவப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்.

(ii) உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக் காப்பு) தரம் III இற்கான

01. **நுண்ணறிவுப் பரீட்சை.**- இது விண்ணப்பதாரி எண்கள், மொழிசார் இடைத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு பல்தேர்வு வினாக்களை கொண்ட வினாத்தாளாகும்.

02. **வலுக்காப்பு மற்றும் நிர்வாகம் :**

இப்பரீட்சார்த்தி,

(i) கொள்முதல் பாதை விதிக்கோவை தொடர்பான அறிவினை பெற்றிருத்தல்.

(ii) புகையிரத திணைக்களம் எரிபொருள் கொள்வனவு தொடர்பான விடயங்களை அறிந்திருத்தல்.

(iii) அவ் எரிபொருள் கொள்வனவிற்காக பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்தல் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து) தொடர்பான அறிவினை பெற்றிருத்தல்.

(iv) எரிபொருள், பிரதான எண்ணெய்களை களஞ்சியப்படுத்தல் தொகைப்படுத்தல், தொகைப்படுத்தலை புத்தகத்தில் கணக்கு வைத்தல் தொடர்பான அறிவு.

(v) எரிபொருள் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவுரைகளை தெரிந்து வைத்திருத்தல். (எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தாங்கிகளில் இயந்திர செயற்பாடுகள் தொடர்பாக சாதாரண அறிவு மற்றும் வாரா வாரம் அவை நடைமுறைப்படுத்தும் முறைகள் தொடர்பாக நிர்வாகத்திற்கு முன்வைக்கக்கூடிய அறிவு மற்றும் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தாங்கிகளில் காணப்படும் பாதுகாப்பினை வழங்கக்கூடிய அறிவு).

(vi) நிலக்கரியினை பெற்றுக்கொள்ளல் மற்றும் நட்டம் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்.

(vii) எரிபொருள் விரயம் மற்றும் நட்டம் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு.

(viii) எரிபொருள் பயன்பாட்டினை சீரான முறையில் பயன்படுத்தல் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளும் எரிபொருள் நிறை தொடர்பாக சரியாக தெரிந்துகொள்வதற்கும் ஸ்லோ மீட்டர் வாசிப்பு தொடர்பான அறிவினையும் பெற்றிருத்தல்.

(ix) எரிபொருள் தொடர்பாக இடம்பெற்ற குற்றங்களை இனங்கண்டு பரிசீலனை செய்து அது தொடர்பான விபரங்களை திரட்டி தீர்வு காணல் மற்றும் திடீர் பரிசீலனை செய்வதற்கான அறிவு.

(x) நாப்தா எண்ணெய் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை தெரிந்திருத்தல்.

(xi) எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவை பகிர்ந்தளிக்கப்படும் இடங்களில் பயன்படுத் தப்படும் நிறுத்தல் உபகரணங்கள் நேர்மையான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதனை கண்காணித்து அதற்கான தீர்வினை மேற்கொள்ள வேண்டிய முறைகளை கூறும் கட்டுரை வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எல். பீ. ஜயம்பதி,
செயலாளர்,
(போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு.)

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
7 ஆவது மாடி,
செத்சிறிபாய,
11 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.
2019, மே 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமையில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III மற்றும் போக்குவரத்து அத்தியட்சகர் (வலுக்காப்பு) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017(2018)**

Limited Competitive Examination For Recruitment to Grade III of Assistance Transportation Superintendent -2017 (2018) Grade III of Assistance Transportation Superintendent (Energy Conservation) Sri Lanka Railways ((Mechanical)

1.0 பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

1.1 விண்ணப்பதாரியின் பதவி : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்) [ ]

1. உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் (இயந்திர) தரம் III
2. போக்குவரத்து அத்தியட்சகர் (ஆற்றல் பாதுகாப்பு) தரம் III
3. இரண்டிற்கும்

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப் படும்) :-----.

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.7 பால் : ஆண் - 0 [ ]
பெண் - 1 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | ]

2.9 சிவில் அந்தஸ்து : விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.10 இனம் : (சிங்களம் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5) [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.11 பிறந்த திகதி :
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

2.12 தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | | ]

3.0 2019.07.12 ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/ தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/ நேர்முகப் பரீட்சையினைத் தாங்கள் சித்தியெய்திய மொழி ஊடகத்தினை குறிப்பிடவும் :----.

4.0 (i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா? :---.

(அ) 2019.07.12 ஆந் திகதியிலுள்ளவாறு வயது :----.
வருடங்கள் :-----, மாதங்கள் :-----. நாட்கள் :-----.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :-----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5 (ஆ) இற்கமைய பந்தி 05 (ஆ) (i)/(ஆ) (ii) இன் கீழ் பரீட்சார்த்தி தகைமை பெற்றுள்ளாரா?

(i) என்பதைக் குறிப்பிடவும் :-----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :-----.
(iii) தரம் :-----.
(iv) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
(v) அப்பதவியில் நிரந்தரமான திகதி :-----.
(vi) சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் :-----.
(vii) பரீட்சைக்கு தோற்றிய மொழி :-----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05 இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள்/ தரங்களின் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 2019.07.12 ஆந் திகதியில் உள்ளவாறான முனைப்பானதும் திருப்திகரமானதுமான மொத்தச் சேவைக்காலம் :---.

5.0 பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துதல் :
பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்தும் இடம் :-----.
(ii) செலுத்தப்பட்ட பணம் :-----.
(iii) பற்றுச்சீட்டு இல. :-----.
(iv) செலுத்தப்பட்ட திகதி :-----.

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

6. பரீட்சார்த்தியின் உறுதியுரை :

....................... ஆந் திகதிக்கு முன்வரும் மற்றும் வயது காலப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 05 (ஆ) இற்கமைய .................. ஆந் திகதியில் உள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அமைய இம்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............... ஆந் திகதிய ................. ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

7. திணைக்களத் தலைவரின் சான்றுரை (தனிப்பட்ட கோவையினைச் சரிபார்த்து) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................... என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும் ........... ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்றும் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 06 (ஆ) இற்கமைய ...................... (ஐந்து) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும், குறிப்பிடப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

06-567

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

**அறிவித்தல்**

மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட உரிமைகோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை -2019

1. மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்ட உரிமைகோரப்படாத பொருட்களின் ஏல விற்பனை 2019.06.29 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

2. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களிற்கு உரிய விலை கிடைக்கப் பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்படவேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை கொண்டுவர வேண்டும்.

| விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் | அளவு |
|---|---|
| 1. மணல் | 90 கியூப் |

எம்.எஸ். எம். சம்சுதீன்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்,
மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

6- 694

## ஆய விற்பனையும் குத்தகையும்

**பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2020**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்குமிணங்க 2020ஆம் ஆண்டுக்குள் மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்காக வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாறாக உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு -

(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரசீத்) ;

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரியின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும். கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.

(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீத்) ;

(ஆ) வருமானச் சான்றிதழோடும், கடித உறையில் இட்டு முத்திரை (சீல்) பதிக்கப்பட வேண்டும். (சீல்) அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் ‘மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்’ குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. ஒவ்வொரு கள்ளுத் தவறணைக்காகவும் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் கீழே மேலதிகமாக இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்தில் அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளைப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பிய கேள்விப்பத்திரதாரர் “தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்” எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது ‘வங்கியில் செலுத்தப்படத்தக்க’ எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது “பாதுகாப்புடைய காசோலை” என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் வீற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் மீள் விற்பனைக்காக 2019.09.19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2019, மே 29.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கமை உபபிரிவு எல்லைக்குள் | மு. ப.11.00 உம் பி. ப. 5.00 | பி. ப. 2.00 உம் இரவு 8.00 | 2,000 | 2019, ஒகத்து 09 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 2019, செத்தெம்பர் 19 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

**குறிப்பு** : 2020 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடத்தில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6-491

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கு அமைவாக பின்வரும் நிறுவனங்கள் கூட்டிணைக் கப்பட்டுள்ளன என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது .-

நிறுவனத்தின் பெயர் : ட்ரைப் ஐ.என்.சி. (பீவீஎ) எல்டீடி
நிறுவனத்தின் பதிவு இல. : பீவீ 00211087
பதிவு செய்யப்பட்ட முகவரி : 108, லோறிஸ் வீதி, கொழும்பு 4.
தபால் குறியீடு: 00400

பாத்திமா சப்றினா மௌசூன்,
செயலாளர்.

108, லோறிஸ் வீதி, கொழும்பு 4.
தபால் குறியீடு: 00400.

6- 192

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : மொடர்ன் சொப்ட் டெக்னொலொஜி (பீவீடி) லிமிடட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.08.10
பதிவிலக்கம் : பீவீ 00202994
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 64 A- 1/1,
டெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை

(திருமதி) சந்திரவதனி வாசவன்,
கம்பனிச் செயலாளர்.

6-249

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சிலோனா கிரீன் நெச்சூரல் ஃபுட்ஸ் ( பீவீஎ) எல்டீடி
பதிவிலக்கம் : பீவீ 00211794
பதிவு முகவரி : இல.148/2, ராகம வீதி, எளபிட்டிவல, ராகம

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கென்ஸ் செக்ரடரீஸ் ( பிறைவேட்) லிமிட்டட்.

6-288

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : லாமோர் ஹொட்டெல்ஸ் (பிரைவட்)
லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00211369
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.05.02
பதிவு முகவரி : இலக்கம் 133/65, சாந். பர்நாதன் மாவத்தை,
ரிலவுள்ள, கந்தான

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எப். ஜே. அன்ட் ஜீ. த சேரம்,
உயர் நீதிமன்ற சட்டத்தரணி.

6-292

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : சீ பீ எல் மனேஜ்மன்ட் சர்விசஸ் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 2574
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 2019.05.04
பதிவு முகவரி : சிலோன் பிஸ்கட் லிமிடட், மே/பா. த.பெ.03, ஹைலெவல் வீதி, மாகும்புர, பன்னிப்பிட்டிய
கம்பனியின் புதிய பெயர் : சீ பீ எல் கோர்பரேட் சர்விசஸ் (பிறைவட்) லிமிடட்

கம்பனிச் செயலாளர்.

6-300

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : அல்பா பிஸ்னெஸ் ஸ்கூல் ( பீவீஎ) எல்டீடி
பதிவிலக்கம் : பீவீ 00211009
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.04.12
பதிவு முகவரி : இலக்கம் 03, கொளின்வூட் இடம், கொழும்பு 6

பணிப்பாளர்.

6-303

---

## கூட்டிணைப்பு அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : LANKA LANDS AND PROPERTIES ( PVT) LTD
கம்பனி இலக்கம் : பீவீ 00206554
கூட்டிணைப்புத் திகதி : 2018.11.23
கம்பனி பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 63/4, சென் மேரிஸ் வீதி, கொழும்பு 15

சபையின் கட்டளைப்படி,

லங்கா லேன்ட்ஸ் அன்ட்
புறொப்பட்டீஸ் ( பிறைவட்) லிமிடட்,
செயலாளர்.

6-305

---

## ஒன்றிணைத்தல் முன்மொழிவுக்கான அறிவித்தல்

ஹட்சிசன் டெலிகொமினிகேசன் லங்கா ( பிறைவட்) லிமிட்டட் ("த கம்பனி") இத்தால் இணக்கத்துடன் அறிவித்துக் கொள்வது யாதெனில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3) (b) ஆம் பிரிவின் கீழான அறிவுறுத்தலுக்கு அமைவாக, எடிசலாட் லங்கா ( பிரைவட்) லிமிட்டட்டுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைத்தல் நடவடிக்கையில் இருந்து தன்னுடைய கட்டமைப்பை நிறுவனம் தக்கவைத்துக்கொள்ளும்.

இதன் மூலம் பொது மக்களுக்கு மேலும் தெரிவித்துக் கொள்வதாவது ஒன்றிணைத்தல் இணக்கப்பாடானது எடிசலாட் லங்கா (பிரைவட்) லிமிட்டட்டின் சொத்துகள், உரிமைகள் , அதிகாரங்கள், சிறப்பு பண்புகள், கடப்பாடுகள் யாவும் நிறுவனத்துக்கு அனுகூலமானதாகவே அமையும்.

குழுமத்தின் கட்டளைக்கு அமைவாக,

ஹட்சிசன் டெலிகொமினிகேசன்
லங்கா ( பிறைவட்) லிமிட்டட்.

6-356/1

---

## ஒன்றிணைத்தல் முன்மொழிவுக்கான அறிவித்தல்

எடிசலாட் லங்கா( பிறைவட்) லிமிட்டட் (த "கம்பனி") இத்தால் இணக்கத்துடன் அறிவித்துக் கொள்வது யாதெனில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3) (b) ஆம் பிரிவின் கீழான அறிவுறுத்தலுக்கு அமைவாக, ஹட்சிசன் டெலிகொமினிகேசன் லங்கா ( பிறைவட்) லிமிட்டட்டுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைத்தல் நடவடிக்கையில் ஹட்சிசன் டெலிகொமினிகேசன் லங்கா ( பிறைவட்) லிமிட்டட் தன்னுடைய நிறுவனக் கட்டமைப்பை தக்கவைத்துக்கொள்ளும்.

இதன் மூலம் பொது மக்களுக்கு மேலும் தெரிவித்துக் கொள்வதாவது ஒன்றிணைத்தல் இணக்கப்பாட்டின் மூலம் நிறுவனத்தின் சொத்துகள், உரிமைகள் , அதிகாரங்கள், சிறப்பு பண்புகள், கடப்பாடுகள் யாவும் ஹட்சிசன் டெலிகொமினிகேசன் லங்கா ( பிறைவட்) லிமிட்டட்டுக்கு அனுகூலமானதாகவே அமையும்.

குழுமத்தின் கட்டளைக்கு அமைவாக,

எடிசலாட் லங்கா ( பிறைவட்) லிமிட்டட்.

6-356/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பவுன்டேஷன் போ எம்பவரிங் எம்ப்ளோய்மன்ட் (கெரண்டி ) லிமிடட்
கம்பனி பதிவு இலக்கம் : ஜீ எல் 00211746
கூட்டிணைப்புத் திகதி: 2019.05.14
பதிவு முகவரி : இல. 52/1, ஏ. ரோஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7

சபையின் கட்டளைப்படி,

எப் ஜே அன்ட் ஜி டி சேரம்,
சட்டத்தரணி.

6-398

---

## பொது அறிவித்தல்

### வரையறுக்கப்பட்ட பீ எம் ஐ இஞ்ஜினியரிங் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிடட் தனியார் நிறுவனம் பீவீ 2713

### வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்தின் எதிர்பார்க்கப்படும் குறைப்பு

வரையறுக்கப்பட்ட பீ எம் ஐ இஞ்ஜினியரிங் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிடட் தனியார் நிறுவனத்தின் ( கம்பனி ) பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆம் பிரிவிற்கமைய அந்நிறுவனத்தின் வெளிப்படுத்தப்பட்ட மூலதனமான, முற்றாகச் செலுத்தப்பட்ட 600,004 மற்றும் ரூபா 6,000,040 ஆனது ரூபா 5, 600,040 ஆல் குறைக்கப்பட்டு ரூபா 400,000 ஆனது முழுமையாக செலுத்தப்பட்ட 600,004 சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

இந்த அறிவிப்பின் நோக்கமானது மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்புக்கான வேற்றுமை தீர்மானத்தின் மூலம் பங்குதாரர்களின் அனுமதியை பெறுவதற்கு இந்த அறிவிப்பிலிருந்து 60 நாட்களுக்குப் பின்னர் ஒரு பிரத்தியேக தீர்மானம் விநியோகிக்கப்பட வேண்டும்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் கட்டளைப்படி,

பீ எம் ஐ இஞ்ஜினியரிங் சேர்விசஸ்
( பிரைவட்) லிமிடட் ,
எக்கௌண்டிங் அன்ட் அலைட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 04.

6-417

---

## நிறுவனமயப்படுத்தலுக்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கு அமையவுள்ளது.-

நிறுவனத்தின் பெயர் : பிரின்டெக் எஸ்டெப்லிஷ்மண்ட் (பிரைவேட்) லிமிடட்
பதிவு இலக்கம் : பீவீ 63386
பதிவு செய்த முகவரி: இலக்கம் 52/1, எக்வத்த வீதி, மிரிஹான, நுகேகொட

அதிகாரி முதியன்சேலாகே உத்பலா புஷ்பமாலி அதிகாரி,
நிறுவன செயலாளர்.

6-426

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

2019.04.26 ஆந் திகதியில் கந்தையா சுரேஸ்கரனும் பெண் அகிலாவும் ஆகிய நாங்கள், 13, Duncann Road, Markham, Ontario, L6B OTS வசிப்பிடமாகக் கொண்டவர்கள், நாங்கள் கனடா பிரசித்தநொத்தாரிசு பரிஸ்ரரும் சொலிசிஸ்ரரும் ஆகிய வனிதா செல்வராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2014. 04.16 ஆந் திகதியில் நிறைவேற்றப்பட்ட தத்துவப்பத்திரம் மூலம் எங்கள் சார்பில் உண்மையானதும் சட்டபூர்வமானதுமான பிரதிநிதி என்றும் உண்மையில் நாங்கள் உடல் வலுவுற்றிருக்கும் நிலை வந்தால் எங்கள் நிதி விவகாரங்களைக் கையாளவும் அதிகாரமளிக்கப்பட்டது.

ஆதலால் இப்பொழுது நாங்கள் சுயபுத்தியுடன் இருப்பதால் குறித்த அதிகார தத்துவப்பத்திரத்தை மீளப்பெற்று இரத்துச் செய்வதாக இத்தால் வெளிப்படுத்துகின்றோம். ஆகவே, கொக்குவில், யாழ்ப்பாணம் , இலங்கை என்னும் இடத்தைச் சேர்ந்த கோசலா கணேசராஜா என்பவருக்கு கொடுத்த எல்லா வலுவும் அதிகாரமும் இத்தால் முடிவுறுத்தப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றோம்.

குறித்த அதிகார தத்துவப்பத்திரம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு வலய உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் 1143/ 2014.05.12 என்ற தினப்பதிவேட்டு இலக்கத்திலும் திகதியிலும் 78/58 என்ற புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

சாட்சிகள் முன்னிலையில் 2019.04.26 ஆந் திகதியில் இதில் எங்கள் கையொப்பம் இட்டுள்ளோம்.

கந்தையா சுரேஸ்கரனும் பெண் அகிலாவும்.
பிரதான நபர்கள்.

பிரசித்த நொத்தாரிசு பரிஸ்ரரும் சொலிசிஸ்ரரும்,
(விவேகானந்தன் சசிதரன்) .

6- 294

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுள் அம்பலாங்கொடை, படபெதிமுல்ல, கன்த மாவத்தை, இல.18, எனும் முகவரியில் வசிக்கும் மன்திரி விதான ஸன்ஜீத் குமார என்பவருக்கு வழங்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதியுடைய இல. 3254 ஐ உடைய அற்றோணித்தத்துவத்தை 2019ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி முதல் செயலிழக்கச் செய்து இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது என்பதை அம்பலாங்கொடை, போகஹவத்தை, இல. 28/2 எனும் முகவரியில் வசிக்கும் நிலெந்தி மன்ஜூக தக்ஸல த சில்வா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இலங்கை பிரஜை அனைவருக்கும் இத்தால் மூலம் அறியத் தருகின்றேன்.

நிலெந்தி மன்ஜூக தக்ஸல த சில்வா .

6- 307

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

